ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2254/2 - 2021 නොවැම්බර් මස 15 වැනි සඳුදා - 2021.11.15

2254/2 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 15 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்

**3(4) ஆம் பிரிவின் கீழான கட்டளை**

திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் ("SDP சட்டம்") 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்ட அமுலாக்கல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன்:-

1. 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நோக்கத்துக்காக செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக அடையாளம் காணப்பட்ட, ஐ.அ.டொலர் 650 மில்லியன், எதிர்பார்க்கப்பட்ட முதலீட்டுடன் தனியார்-அரச-பங்குடைமை ஒன்றாக (PPP) முப்பத்தைந்து (35) ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதியொன்றுக்கு கட்டி நடாத்திக் கையளித்தல் (BOT) எனும் அடிப்படையின் மீதான, கொழும்புத் துறைமுக விரிவாக்கலின் கீழான மேற்குக் கொள்கலன் முனையம் - 1 எனும் கருத்திட்டத்தின் அபிவிருத்தி மற்றும் தொழிற்பாடு பற்றிய இயைபான தகவல்களை உள்ளடக்கிய அறிவித்தல் 2021, யூலை 30 ஆந் திகதிய 2238/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

2. ஐ.அ.டொலர் 650 மில்லியன், எதிர்பார்க்கப்பட்ட முதலீட்டுடன் தனியார்-அரச-பங்குடைமை ஒன்றாக (PPP) முப்பத்தைந்து (35) ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதியொன்றுக்கு கட்டி நடாத்திக் கையளித்தல் (BOT) எனும் அடிப்படையின் மீது, கொழும்புத் துறைமுக விரிவாக்கலின் கீழான மேற்குக் கொள்கலன்

முனையம் - 1 எனும் கருத்திட்டத்தின் அபிவிருத்தி மற்றும் தொழிற்பாட்டை செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக வெளிப்படுத்துவதற்கு, SDP சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி 2021, ஒற்றோபர் 05 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

3. “தனியார்-அரச-பங்குடைமை ஒன்றாக (PPP) முப்பத்தைந்து (35) ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதி யொன்றுக்கு கட்டி நடாத்திக் கையளித்தல் (BOT) எனும் அடிப்படையின் மீது, கொழும்புத் துறைமுக விரிவாக்கலின் கீழான மேற்குக் கொள்கலன் முனையம் - 1 எனும் கருத்திட்டத்தின் அபிவிருத்தி மற்றும் தொழிற்பாடு” என மேற்சொன்ன செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் அறியப்படுதல் வேண்டும் என்பதுடன், இக்கருத்திட்டத்தை மேற்கொள்ளும் கருத்திட்டக் கம்பனியாக கொழும்பு வெஸ்ட் இன்டர் நெஷனல் டேர்மினல் (பிறைவேட்) லிமிட்டெட் இருத்தலும் வேண்டும்.

4. மேற்சொன்ன கருத்திட்டம் பின்வருமாறாக மூன்று (03) கட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வர்த்தகத் தொழிற்பாடுகளைத் தொடங்குதல் வேண்டும்.

**கட்டம் I**

BOT உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்டவாறு தேவையான உட்கட்டமைப்பு உள்ளடங்கலாக, 600 மீற்றர் துறைமேடைச் சுவர் மற்றும் முனையப்பகுதி என்பவற்றின் நிர்மாணம், இது கருத்திட்டக் கம்பனிக்கும் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபைக்கும் இடையே கைச்சாத்திடப்படவுள்ள, BOT உடன்படிக்கைத் திகதியிலிருந்து முப்பத்தாறு (36) மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யப்பட்டு தொழிற்பாடுகள் தொடங்கப்படுதல் வேண்டும்.

**கட்டம் II**

BOT உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்டவாறு தேவையான உட்கட்டமைப்பு உள்ளடங்கலாக, 1400 மீற்றர் துறைமேடைச் சுவரின் முழு நீளத்தையும் பூர்த்தி செய்தல். இது BOT உடன்படிக்கைத் திகதி யிலிருந்து நாற்பத்தெட்டு (48) மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்பட்டு தொழிற்பாடுகள் தொடங்கப்படுதல் வேண்டும்.

**கட்டம் III**

BOT உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்டவாறு முனையத்தைப் பூர்த்தி செய்தல். இது BOT உடன் படிக்கைத் திகதியிலிருந்து அறுபது (60) மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்பட்டு தொழிற்பாடுகள் தொடங்கப் படுதல் வேண்டும்.

5. இக்கட்டளைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களிலிருந்தான விலக்களிப்புக்கள் கருத்திட்டக் கம்பனிக்கும் அத்துடன் இலங்கை முதலீட்டுச் சபையினால் (BOI) அங்கீகரிக்கப்பட்ட வாறான அக்கம்பனியின் ஒப்பந்தக்காரர்கள் மற்றும் உப ஒப்பந்தக்காரர்களுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும். சொல்லப்பட்ட விலக்களிப்புக்கள் முடிவடைவதன்மேல், அப்போதைக்குள்ள வரிகள் ஏற்புடை யனவாக வருதல் வேண்டும்.

**அட்டவணை**

**1. 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம்**

(i) சொல்லப்பட்ட கருத்திட்டச் செயற்பாடுகளிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட இலாபங்கள் மற்றும் ஈட்டுகை களுக்காக கருத்திட்டக் கம்பனி மீது வருமான வரி விதிப்பது தொடர்பிலான 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளானவை, இருபத்தைந்தாண்டு (25) காலப் பகுதியொன்றுக்கு (“வரி விலக்களிப்புக் காலப்பகுதி”) ஏற்புடையனவாதலாகாது.

கருத்திட்டக் கம்பனி வரி செலுத்தப்படற்பாலதான இலாபத்தை எந்த முதலாண்டில் பெறுகின்றதோ அந்த முதலாண்டிலிருந்து அல்லது வர்த்தகத் தொழிற்பாடுகள் தொடங்கப்பட்ட பின்னரான இரண்டு (02) ஆண்டுகளிலிருந்து, இவற்றுள் எது முதலில் நிகழ்கின்றதோ அதிலிருந்து, சொல்லப்பட்ட வரி விலக் களிப்புக் காலப்பகுதி தொடங்குதல் வேண்டும்.

ஆயின், மேற்சொன்ன வரி விலக்களிப்புக் காலப்பகுதி முடிவடைந்த பின்னர் கருத்திட்டக் கம்பனியின் இலாபங்கள், ஈட்டுகைகள் மற்றும் வருமானம் தொடர்பிலான வருமான வரி, அப்போதைக்கு வலுவிலுள்ள காலத்திற்காக 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமையச் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

(ii) விலக்களிக்கப்பட்ட இலாபம், ஈட்டுகைகள் ஆகியவற்றிலிருந்து பங்குதாரர்களினால் பகிர்ந்தளிக்கப்பட்ட மற்றும் பெறப்பட்ட பங்கிலாபங்களானவை, சொல்லப்பட்ட இருபத்தைந்தாண்டு (25) வரி விலக்களிப்புக் காலப்பகுதியின் போதானதும் அதன்பின்னரான ஓராண்டின் (01) போதானதுமான வருமான வரியிலி ருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(iii) பின்வருவன மீதான பிடித்துவைத்தல் வரிச் செலுத்துகையிலிருந்து கருத்திட்டக் கம்பனி விலக்களிக்கப் படுதல் வேண்டும்:

அ. மூலதனச் செலவினத்துக்காக எடுக்கப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டி

ஆ. கருத்திட்டத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆலோசகர்களுக்கான தொழில்நுட்பக் கட்டணம்

(iv) ஐந்தாண்டு (05) காலப்பகுதியொன்றுக்கு மேற்சொல்லப்பட்ட கருத்திட்டத்துடன் தொடர்புடைய தொழிலிலிருந்தான ஈட்டுகைகள் மற்றும் இலாபங்களில் இருந்து எழுகின்ற வருமான வரியிலிருந்து, கூடியபட்சமாக இருபது (20) வெளிநாட்டவர்கள் எனும் எண்ணிக்கைக்குட்பட்டு, கருத்திட்டக் கம்பனியின் வெளிநாட்டு ஊழியர்கள் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

**2. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பெறுமதிசேர் வரிச் சட்டம்**

BOT உடன்படிக்கைத் திகதியிலிருந்து ஐந்தாண்டு (05) கருத்திட்ட நடைமுறைப்படுத்தற் காலப் பகுதியின்போது, இலங்கை முதலீட்டுச் சபையினால் (BOI) அங்கீகரிக்கப்பட்டவாறாக, கருத்திட்ட நடைமுறைப்படுத்தலுக்கெனத் தேவைப்படுத்தப்பட்ட கருத்திட்டத்துடன் தொடர்புடைய எல்லாப் பொருட்களும் பெறுமதி சேர் வரி (VAT) செலுத்துகையிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும். கருத் திட்ட நடைமுறைப்படுத்தற் காலப்பகுதியின்போது கருத்திட்டத்துடன் தொடர்புடைய பண்டங்களின் அல்லது சேவைகளின் உள்நாட்டுக் கொள்வனவுகள் மீதான பெறுமதி சேர் வரி இதிலிருந்து வேறுபடுதல் வேண்டும்.

அதன்பின்னர், வழங்கப்பட்ட சேவைகள் VAT சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) அல்லது (இ) பந்தியின் ஏற்பாடுகளினுள் வந்திருப்பின் VAT செலுத்துகை பூச்சிய விகிதத்தில் காணப்படும். பூச்சிய விகிதத்திலான சேவைகள் தவிர்ந்த வேறு எவையேனும் சேவைகள் வழமையான விகிதத்திலான VAT செலுத்துகைக்குப் பொறுப்புடையனவாகும்.

**3. 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்**

BOT உடன்படிக்கைத் திகதியிலிருந்து ஐந்தாண்டு (05) கருத்திட்ட நடைமுறைப்படுத்தற் காலப் பகுதியின்போது இறக்குமதி செய்யப்பட்ட, இலங்கை முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வாறான கருத்திட்டத்துடன் தொடர்புடைய பண்டங்களின் மீதான, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டு ("PAL") விதிப்பனவிலிருந்தும் செலுத்துகையிலிருந்தும் கருத் திட்டக் கம்பனி விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

**4. 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்**

BOT உடன்படிக்கைத் திகதியிலிருந்து ஐந்தாண்டு (05) கருத்திட்ட நடைமுறைப்படுத்தற் காலப் பகுதியின்போது, இலங்கை முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டவாறான கருத்திட்டத்துடன் தொடர்புடைய பொருட்களின் இறக்குமதியானது ஆயவரி (“CESS”) செலுத்துகையிலிருந்து விலக்களிக் கப்படுதல் வேண்டும்.

**5. (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டம்**

BOT உடன்படிக்கைத் திகதியிலிருந்து ஐந்து (05) ஆண்டுகளுக்கான கருத்திட்ட நடைமுறைப்படுத்தற் காலப்பகுதியின்போது, இலங்கை முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டவாறாக, (நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட ஏற்பெதிர் பொருட்பட்டியலிலுள்ள பொருட்கள் தவிர்ந்த) கருத்திட்டத் துடன் தொடர்புடைய பொருட்களின் எல்லா இறக்குமதிகளும் சுங்க இறக்குமதித் தீர்வை செலுத்துகை யிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

எவ்வாறாயினும், ஏற்பெதிர் பொருட்பட்டியலிலுள்ள பொருட்களின் ஏதேனும் இறக்குமதியானது, ஒன்றில், அத்தகைய பொருட்கள் இலங்கையில் முற்றுமுழுதாகத் தயாரிக்கப்பட்டிராதவிடத்து அல்லது போதிய தரத்தில், அளவில் மற்றும் கருத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கான காலவரையறையினுள் கிடைக்கத்தக்கனவாக இல்லாதிருக்குமிடத்து அவை பற்றி முதலீட்டுச் சபையினால் கவனத்திற்கொள்ளப் படுதல் வேண்டும்.

**மஹிந்த ராஜபக்ஷ, பா. உ.,**
பொருளாதாரக் கொள்கைகள் மற்றும்
திட்ட அமுலாக்கல் அமைச்சர்.

பொருளாதாரக் கொள்கைகள் மற்றும்
திட்ட அமுலாக்கல் அமைச்சு,
2021, நவெம்பர் 15.

11 - 688

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.